கொடுத்துள்ளார்கள். இரண்டு மாதங்கள் இருக்கும். ஒருநாள் நானும், மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களும், நெல்லை மாவட்ட ஆட்சியரும் இணைந்து, சில பகுதிகளுக்குச் சென்றுவந்தோம். அப்போது, ஒரு சிறு அருங்காட்சியகத்தை நாங்கள் பார்த்தோம். மாவட்ட ஆட்சியர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு உழைத்த உழைப்பைப் பார்த்தேன். காலை முதல் மாலை 5-00 மணிவரை உணவருந்தாமல், அந்தளவிற்கு நம்முடைய நாகரிகத்தை வெளியே கொண்டுவந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, இன்று, தமிழகத்தையே உலக அரங்கில் தலைநிமிரச் செய்திருக்கின்ற அற்புதமான அறிவிப்பை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். நானும் தண்பொருநை மண்ணிலே இருந்து வந்தவன் என்ற பெருமையோடு வாழ்த்துகிறேன்.

5. தகவல் கோரல்

மண்பாண்டம் செய்தல், வீடு கட்டுதல், செங்கல் சூளை மற்றும் சாலைப் பணிகளுக்கு மண் எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள். கையை உயர்த்தினீர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. ஆ. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 55-ன்கீழ் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை தகவல் கோருகின்ற முறையில் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: தமிழகத்தில், செங்கல் சூளை வைத்திருப்பவர்கள் மண் எடுக்க முடியவில்லை. இன்றைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரான அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, எளிய முறையில் விவசாயத்திற்கு மண் எடுக்கலாம் என்று முன்பு ஒரு சட்டத்தைப் போட்டார்கள். வீடு கட்டுபவர்கள், கடைக்கால் எழுப்புவதற்குக்கூட மண் எடுக்க முடியவில்லை, மேலும், மண்

2021 செப்டம்பர் 9] [திரு. ஆ. கோவிந்தசாமி]

பானை செய்பவர்கள்கூட மண் எடுக்க முடியவில்லை. நாங்கள் கொடுத்ததற்கு, அரசாணையில் அதற்கொரு விளக்கமும் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, அந்த அரசாணையில், 800 மாட்டு வண்டி அளவுக்கு மண் கொடுப்பதற்கு சட்டம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசாணையை அன்று நானும், மாண்புமிகு பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான அண்ணன் திரு. கே.பி. அன்பழகன் அவர்களும் மற்றும் அரூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரும் நேரடியாகச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 70 நாட்களுக்கு முன்பாகக்கூட ஒரு மனு கொடுத்தோம். இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அதன்பின்னர், நாங்கள் மூன்று முறை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நேரடியாகச் சந்தித்து மனு கொடுத்தோம். செங்கல் சூளை விற்கின்றவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *செங்கல் சூளை, மண்பாண்டம் மற்றும் வீடு கட்டுவதற்குத் தேவையான மண் ஆகிய இந்த மூன்றுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றார்கள். உங்களுக்காகத்தான் பதில் சொல்கிறார்கள். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கோவிந்தசாமி அவர்கள், இந்தப் பிரச்சினையை கிளப்பியிருக்கிறார்கள். இரண்டாவது முறையாகச் சொல்கிறேன், போதுமா? தமிழகம் முழுவதும் மண்பாண்டத் தொழில் செய்பவர்கள், செங்கல் சூளை வைத்திருப்பவர்கள், நிலத்தை மேம்படுத்த வண்டல் மண் எடுக்கும் விவசாயிகள், சாலை மேம்பாட்டுப் பணி செய்ய மண் எடுப்பவர்கள் ஆகியோரெல்லாம் மண் எடுக்கக்கூடிய நிலைமை இல்லையென்ற காரணத்தால், பெரிதும் வருந்தினார்கள். அப்போது தேர்தல் காலம். எங்களுடைய தலைவர் அவர்கள் தேர்தல் நேரத்தில் பேசுகின்றபோது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்போம் என்று தெரிவித்தார்கள். அதைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

முற்பகல் 11–40

இந்தமாதிரி மண் எடுக்கவே கூடாது என்று ஒருவர் Madurai High Court*–ல்* case *போட்டார். அதனுடைய விளைவாக, 12–*

[திரு. துரைமுருகன்] [*2021 செப்டம்பர் 9*

2–2021 அன்று, இதுகுறித்து நீதிபதி அவர்கள் ஒரு தீர்ப்பைக் கூறினார்கள். அதாவது, "there shall not be any grant of quarry lease without ascertaining the composition/component of the minerals and without obtaining a report from an authorised lab" *என்று அந்தத் தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்கள். அதாவது மண் எடுக்க அனுமதி வழங்குவதற்குமுன், 'கனிமத்தில் உள்ள கூறுகளை அறிய அனுமதிக்கப்பட்ட ஆய்வுக்கூடங்களில் மண் சோதனை செய்ய வேண்டும். மண் சோதனை செய்து, அதற்கு பிறகுதான் மண் எடுக்கவேண்டும்.' இது நீதிபதி கொடுத்த தீர்ப்பு. அது மட்டுமல்லாமல், குத்தகை ஒப்பந்தம் நிறைவேற்றவேண்டும். மூன்றாவது, சுற்றுச்சூழல் ஆணையத்தின் அனுமதி பெறவேண்டும். 'சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு நீங்க போனால் அவ்வளவு ஈசியாக வராது. இது மூன்றும் போட்டால் மண் எடுங்கள்' என்று நீதிபதி சொன்னார். ஆனால், அரசாங்கத்திற்கு அது தேவைப்படுகிறது. நிருவாகம் என்ன செய்யும், நிறைய தேவை இருக்கிறது.* Road *போடுகிறார்கள்.* PWD, building *கட்டுகிறார்கள், நாங்களும்* dam *கட்டுகிறோம் இதற்கெல்லாம் தேவை. சாலைப் பணிகள்,* PWD *பணிகள் மற்றும் பிற அரசுப் பணிகள் ஆகியவை தடையின்றி நடைபெறுவதற்காக, சுற்றுச்சூழல் ஆணையத்தின் அனுமதியின்றி மண் எடுக்க அனுமதி வழங்குவது என்று 30–7–2021 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அடுத்து, மற்ற விளக்கங்களுக்கு என்ன செய்வது என்று கேட்டோம், மறுபடியும் முதலமைச்சரோடு கலந்து பேசினோம், கலந்து பேசி, இந்த மாதிரி ஒரு* Section*–ல், வேறு வழி கிடையாது.* Tamil Nadu Minor Mineral Concession Rules, *1959 என்ற ஒரு* book*–ல் ஒரு* amendment *கொண்டு வந்தால்தான், இதைச் செய்யமுடியும் என்பதற்காக,* rule *42 என்று* create *செய்து அந்த* section*–ல்* 'removal of earth for betterment of agricultural lands' *என்ற* words*–ஐ சேர்த்து விட்டோம். அதை சேர்த்ததனுடைய விளைவு இப்போது நிலப்பரப்பிற்குக்கீழ், ஒன்றரை மீட்டர் அளவிற்கு மண் எடுப்பது என்பது சுரங்கப்பணி என்பதற்கு உள்ளே வராது. ஆகையால் ஒன்றரை மீட்டர் வரையில் மண் எடுத்துக்கொள்ளலாம். விவசாயிகளும், மற்றவர்களும் மண் எடுக்க, சுற்றுச்சூழல் ஆணையத்தின் அனுமதி பெறவேண்டியதில்லை. மண் எடுக்கும் இடத்தில் இருந்து, செங்கல் சூளைக்கு எடுத்துச் செல்பவர்கள், அதற்குரிய கட்டணத்தை அரசுக்கு கட்டிவிட்டு போகலாம்.*

2021 செப்டம்பர் 9] [திரு. துரைமுருகன்]

ஆக, மண்பாண்டத் தொழில் செய்பவர்கள், செங்கல் சூளை வைத்திருப்பவர்கள் நிலமேம்பாட்டிற்காக மண் எடுப்பவர்கள், சாலைப் பணி என அனைத்திற்கும் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கவன ஈர்ப்பு

பண்ருட்டி, இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், அதில் என்ன எழுதிக் கொடுத்திருக்கிறீர்களோ அதை மட்டும் வாசித்துவிட்டு உட்காருங்கள். இன்னும் இரண்டு வாய்ப்புகள் வரும்.*

***திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான பல்வேறு கோயில்களுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளையும், அதுபோன்று தனி அறக்கட்டளைகள் என்கிற பெயரிலும் பரம்பரை அறங்காவலர்கள் என்ற பெயரிலும் அவர்கள் ஆக்கிரமித்து அனுபவித்து வருவதோடு மட்டுமல்லாமல் காலி மனைகளை* real estate *ஆக மாற்றி விற்பனை செய்து வருகிறார்கள்", ஆதலால் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இல்லை, நீங்கள் குறிப்பில் இருப்பதை மட்டும் வாசித்து விட்டுவிடுங்கள். அதாவது, பண்ருட்டி தொகுதியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அவ்வளவுதான் வாசிக்கவேண்டும். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள், (குறுக்கீடு) உங்களுக்கு கேள்வி*